இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 106– திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 10 – திங்கள்கிழமை 25 நவம்பர் 2024 – சென்னை 28+12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 106: Thiruvalluvar Year - 2055 - Karthigai 10 - Monday 25 November 2024 - Chennai 28+12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2024) சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலையரங்கில் நடைபெற்ற முத்தமிழ்ப் பேரவையின் பொன்விழா ஆண்டு இசைவிழாவில் கலந்துகொண்டு, “கலைஞர்” விருதினை புரட்சித்தமிழன் சத்யராஜ் அவர்களுக்கும், “ராஜரத்னா” விருதினை திருப்பாம்புரம் டி.கே.எஸ்.மீனாட்சி சுந்தரம் அவர்களுக்கும், “இயல் செல்வம்” விருதினை திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்களுக்கும், “இசைச்செல்வம்” விருதினை முனைவர் காயத்ரி கிரீஷ் அவர்களுக்கும், “நாதஸ்வரச்செல்வம்” விருதினை திருக்கடையூர் டி.எஸ்.எம். உமாசங்கர் அவர்களுக்கும், “தவில் செல்வம்” விருதினை சுவாமிமலை சி. குருநாதன் அவர்களுக்கும், “கிராமியக்கலைச் செல்வம்” விருதினை முனைவர் தி.சோமசுந்தரம் அவர்களுக்கும், “நாட்டியச்செல்வம்” விருதினை திருமதி பார்வதி ரவி கண்டசாலா அவர்களுக்கும் வழங்கிச் சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், முத்தமிழ்ப் பேரவையின் செயலாளர் பி. அமிர்தம், தலைவர் ஜி. ராமானுஜம், துணைத் தலைவர் குணாநிதி அமிர்தம், டாக்டர் திருவாரூர் பக்தவத்சலம், சட்டமன்ற உறுப்பினர் த.வேலு ஆகியோர் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2024) சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலையரங்கில் நடைபெற்ற முத்தமிழ்ப் பேரவையின் பொன்விழா ஆண்டு இசைவிழாவில் கலந்துகொண்டு “திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் அவர்களின் வாழ்க்கை வரலாறு” நூலை வெளியிட, அவரது மகள் திருமதி வனஜா சுப்பிரமணியம் அவர்கள் பெற்றுக்கொண்டார். உடன் புரட்சித்தமிழன் சத்யராஜ், முத்தமிழ்ப் பேரவையின் செயலாளர் பி. அமிர்தம் ஆகியோர் உள்ளனர்.

# முத்தமிழ்ப் பேரவை, மொழி - கலையைக் காக்க வேண்டும்!

## முத்தமிழ்ப் பேரவை பொன்விழா ஆண்டு விருதுகள் வழங்கும் விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை,நவ.25-**

**முத்தமிழ்ப் பேரவை பொன்விழா ஆண்டு விருதுகள் வழங்கும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் பேது, “முத்தமிழ்ப் பேரவை, மொழி - கலையைக் காக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2024) சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலையரங்கில் நடைபெற்ற முத்தமிழ்ப் பேரவையின் பொன் விழா ஆண்டு இசைவிழாவில் ஆற்றிய விழாப் பேருரை வருமாறு:-**

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த முத்தமிழ்ப் பேரவையின் சார்பில், இந்தப் பேரவையின் பொன்விழா - பல்வேறு கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா – இசை விழா நாதஸ்வரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை டி. என்.ராஜரத்தினம் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழா - இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் முத்தமிழ்ப் பேரவையின் செயலாளர் மதிப்பிற்குரிய இயக்குநர் அமிர்தம் அவர்களுக்கும், பேரவையின் தலைவர் ராமானுஜம் அவர்களுக்கும், துணைத் தலைவர் தம்பி குணாநிதி அவர்களுக்கும், மற்றுமுள்ள நிர்வாகிகளுக்கும் என்னுடைய பாராட்டுகளை, வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

### தலைவர் கலைஞரால் தொடங்கப்பட்ட அமைப்பு!

இந்த முத்தமிழ்ப் பேரவை என்பது பெருமைக்குரிய ஒன்றாக சிறப்புக்குரிய ஒன்றாக இருப்பதற்குக் காரணம், இது தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட அமைப்பு. இது தொடங்கிய காலத்தில் இருந்து தலைவர் கலைஞர் அவர்கள் ஆண்டுதோறும் ஒரு நாள் இந்த முத்தமிழ்ப் பேரவைக்காக நேரத்தை ஒதுக்கி, அவ்வாறு நடத்தப்படும் இந்த நிகழ்ச்சியில் அவரும் மகிழ்ச்சியோடு வந்து கலந்து கொண்டு, தன்னுடைய கரங்களால் அந்த விருதுகளை வழங்கிச் சிறப்பிப்பது அவருடைய கடமையாகவே கருதி அதை செயலாற்றிக் கொண்டிருந்தார்கள்.

அவருடைய வழியில் நானும் இன்றைக்கு அந்தக் கடமையை ஆற்றும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். முத்தமிழ்ப் பேரவையை கடந்த 50 ஆண்டு காலமாகக் கட்டிக் காத்து வரும் நம்முடைய இயக்குநர் திரு. அமிர்தம் அவர்கள் நான் ஒவ்வொரு ஆண்டும் வர வேண்டும் என்று அவரே முன்கூட்டியே இரண்டு மாதத்திற்கு முன்பு என்னிடம் தேதியைச் சொல்லி அவர் அழைப்பது உண்டு. அழைப்பது உண்டு என்று சொல்வதைவிட, கட்டளையிடுவதுண்டு. அவருடைய அந்த அன்பான கட்டளையை நான் ஏற்றுக் கொண்டு இதில் நான் தொடர்ந்து பங்கேற்றுக் கொண்டி ருக்கிறேன் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

### முத்தமிழுக்கு இயக்குநர் அமிர்தம் ஆற்றும் முத்தாய்ப்பான பங்களிப்பு!

இந்த அமைப்பு தொடங்கிய காலத்தில் இருந்து ஒரு பீடு நடை போட்டு, சிறப்போடு எழுச்சியோடு ஏற்றத்தோடு இந்த முத்தமிழ்ப் பேரவை நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், குறிப்பாகவும் சிறப்பாகவும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அதன் இயக்



குநர் அமிர்தம் அவர்களின் சாதனை என்பது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். தமிழ்த் திரை உலகில் எத்தனையோ சாதனைகளை அவர் ஆற்றி இருந்தாலும் முத்தமிழுக்கு அவர் ஆற்றி வரும் இந்த பங்களிப்பானது முத்தாய்ப்பாக இது அமைந்திருக்கிறது.

### இசையுலகின் முடிசூடா மன்னர் திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை!

எழுத்தாளர் துமிலன் எழுதியிருக்கும் நாதஸ்வரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலின் சுருக்கப்பட்ட வடிவத்தை, தம்பி குணாநிதி அவர்கள் தயாரித்து இங்கு வெளியிடும் வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

இசையுலகத்தில் முடிசூடா மன்னராக ஒரு சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தவர் ராஜரத்தினம் அவர்கள். அவரைப் பற்றிச் செம்மங்குடி சீனிவாசய்யர் அவர்கள் சொன்னதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்...

“நாதஸ்வர வித்வான்களில் திருவாவடுதுறை ராஜரத்தினம் அவர்கள் ஒரு பெரிய மேதாவி. காதில் கடுக்கன் மின்ன, கிராப்புத் தலையோடு அவர் வாசிக்கும் அழகே தனி அழகு. அவருக்கு முன்பெல்லாம், நாதஸ்வரம் என்பது ஒன்றரை முழம்தான் இருக்கும். முதன் முதலில் ராஜரத்தினம் அவர்கள்தான் நாதஸ்வரத்தை நீளமாகச் செய்து வாசிக்க ஆரம்பித்த பெருமைக்கு உரியவர்” – என்று செம்மங்குடி சீனிவாசய்யர் அவர்கள் பெருமையோடு சொல்லியிருக்கிறார். அத்தகைய ராஜரத்தினம் அவர்களின் பெயரில் ‘ராஜரத்னா’ விருது வழங்க வேண்டும் என்று முதன்முதலில் உத்தரவிட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

### கலைஞர் விருது: சத்யராஜுக்கு வழங்குவதில் பெருமைப்படுகிறேன்!

ஆண்டுதோறும் பல்வேறு கலைஞர்களுக்கு விருதுகள் கொடுக்கிறீர்கள். கலைஞரால் உருவாக்கப்பட்ட இந்த முத்தமிழ்ப் பேரவையின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் வரும் ஆண்டில் இருந்து ஒரு விருது வழங்க வேண்டும் என்று சென்ற ஆண்டு நடந்த விழாவில் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். வேண்டுகோள் அல்ல, ஒரு கட்டளையை இந்த அமைப்புக்கு நான் பிறப்பித்தேன். அதை மனமுவந்து நம்முடைய அமிர்தம் அவர்கள் ஏற்றுக் கொண்டு இந்த ஆண்டே அதை நடைமுறைப்படுத்தியிருக்கிறார். அதற்காக முதலில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக இந்த ஆண்டு ‘கலைஞர் விருது’ முதன் முதலாக இந்த அமைப்பின் சார்பில் தரப்படுவது யாருக்கு என்று கேட்டால், புரட்சித் தமிழன் நம்முடைய சத்யராஜ் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஏனென்றால் மிக மிகத் தகுதி வாய்ந்தவருக்கு அந்த விருது வழங்கப்பட்டிருக்கிறது. அவர் சொன்னார், “அதைப் பெறுவதில் நான் பெருமைப்படுகிறேன்” என்று! உங்களுக்கு வழங்குவதில் நான் பெருமைப்படுகிறேன் அதுதான் உண்மை.

கலைஞரின் கனல் தெறிக்கும் வசனங்களைப் பேசி நடித்தவர். தந்தை பெரியாராகவே வாழ்ந்து காட்டியவர். எனவே, அவருக்கு வழங்கப்பட்டிருக் கிறது. கலையுலகத்தில் இருந்து கொண்டே தன்னுடைய பகுத்தறிவு உணர்வை சுயமரியாதை எண்ணத்தை திராவிடக் கொள்கைகளை மறைக்காமல் எதைப்பற்றியும் கவலைப்படாமல் துணிச்சலாகப் பேசக்கூடியவர் நம்முடைய சத்யராஜ் அவர்கள்.

சில நாட்களுக்கு முன்பு, இதே அரங்கத்தில் “திராவிடமே தமிழுக்கு அரண்” என்ற சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, அதில் சிறப்பான துணிச்சலான கருத்துகளை எல்லாம் எடுத்துப் பேசி இருக்கிறார் நம்முடைய சத்யராஜ் அவர்கள். அவருக்குத்தான் கலைஞர் விருது இங்கே வழங்கப்பட்டிருக்கிறது.

நடிகர் சிவக்குமார் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், கலைஞரின் வசனங்களைப் பேசி, தான் நடிக்க கற்றுக் கொண்டேன் என்பதைப் பற்றி அவரே குறிப்பிட்டு இருக்கிறார். அதனால்தான் இன்றைக்கு தான் நடிகராக மின்னிக் கொண்டிருப்பதாகவும், தான் நடிகனாக ஆனதற்குக் கலைஞர் என்ற ஆசிரியர்தான் காரணம் என்றும் அனைத்துக் கூட்டங்களிலும் பேசிக் கொண்டிருப்பவர் நம்முடைய சத்யராஜ் அவர்கள்.

அதேபோல, மக்கள் திலகம் எம்.ஜிஆரிடமும் மரியாதை வைத்திருப்பவர் நம்முடைய சத்யராஜ் அவர்கள். கலைஞர் மேல் தனக்கு இருக்கும் மரியாதையை மறைக்காதவர் என்பதுதான் அவருக்குள்ள பெருமை. அவருக்கு மீண்டும் மீண்டும் என்னுடைய பாராட்டுகளை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### தமிழ் இசை வரலாற்றில் திருப்பாம்புரம் குடும்பத்தின் பங்கு!

‘ராஜரத்னா விருதை’த் திருப்பாம்புரம் டி.கே.எஸ். மீனாட்சி சுந்தரம் அவர்கள் பெற்றுள்ளார். திருப்பாம்புரம் இசைக் குடும்பத்தைச் சேர்ந்த அவர், தலைவர் கலைஞர் கையால் ‘கலைமாமணி’ விருது பெற்றவர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களால் தமிழ்நாடு அரசவைக் கலைஞர் என்ற தகுதியைப் பெற்றவர். அவருக்குத்தான், இன்றைக்கு நான் ‘ராஜரத்னா விருதை’ வழங்கி இருக்கிறேன். தமிழ் இசை வரலாற்றில் திருப்பாம்புரம் குடும்பத்திற்காகவே பல பக்கங்களை ஒதுக்க வேண்டும். இப்படியான சிறப்புக்குரியவர் இந்த விருதைப் பெறுவது பெருமைக்குரியது.

### கழகத்தின் முழக்கமாகச் செயல்படும் ஆண்டாள் பிரியதர்ஷினி!

‘இயல் செல்வம்’ விருதை ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் பெற்றிருக்கிறார். ‘பொதிகை’ தொலைக்காட்சி மூலமாகப் பொதுவெளியில் அறிமுகம் ஆனாலும் இன்று எங்கள் கழகத்தின் முழக்கமாகச் செயல்படக்கூடியவர். கவிஞர் சிறுகதையாசிரியர் புதின எழுத்தாளர் கட்டுரையாளர் பேச்சாளர் – மொழிபெயர்ப்பாளர் என்று பன்முக ஆற்றல் கொண்டவர்.

‘இசைச் செல்வம்’ விருதை முனைவர் காயத்ரி கிரீஷ் அவர்கள் பெற்றிருக்கிறார். சுமார் 38 ஆண்டுகளாக இசை நிகழ்ச்சிகள் நடத்தி வரும் காயத்ரி கிரீஷ் அவர்கள், இசையில் அனைத்துத் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்திய சிறப்புக்குரியவர். தமிழ்ப் படைப்புகளை யூடியூப் சேனல்களில் கொண்டு வந்த வகையில் நம் அனைவரின் பாராட்டுக்கும் உரியவர்.

‘நாதஸ்வரச் செல்வம்’ விருதைத் திருக்கடையூர் டி.எஸ்.எம்.உமாசங்கர் அவர்கள் பெற்றிருக்கிறார். கடந்த 20 ஆண்டுகளாக, நாதஸ்வர இசையுலகத்தில் வலம் வரும் உமாசங்கர், தன்னைப்போலவே பல திறமைசாலிகளை உருவாக்கிக்கொண்டு வருகிறார். அவர் துறைக்குப் பெரிய பங்களிப்பை இதன் மூலமாக அவர் செய்கிறார்.

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

# இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75-ஆவது ஆண்டு!

## கொண்டாடுவது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, நவ. 25-**

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75-ஆம் ஆண்டு நிகழ்ச்சிகள் - அரசு அலுவலகங்கள், அரசு சார்ந்த மற்றும் தன்னாட்சி நிறுவனங்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்கவும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பல்வேறு போட்டிகளை நடத்திடவும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை உள்ளடக்கி இந்தியத் திருநாட்டினை வளமான பாதையில் முன்னெடுத்துச் செல்லும் ஓர் உன்னத உருவாக்கம், அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வடிவமைத்துத் தந்த நமது அரசியலமைப்புச் சட்டமாகும்.




இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 75-வது ஆண்டினை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் வரும் 26.11.2024 நாளன்று காலை 11 மணிக்கு தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும், மாண்பமை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை தலைமை அலுவலகங்கள், அனைத்து சார்நிலை அரசு அலுவலகங்கள், மாநில அரசின் அனைத்து அலுவலகங்கள், தன்னாட்சி அதிகார அமைப்புகள், நிறுவனங்கள், தன்னாட்சி அரசு நிறுவனங்கள், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அரசியலமைப்பு நெறிமுறைகள் பற்றிய பேச்சுப் போட்டிகள் / கருத்தரங்குகள் / வினாடி வினா நிகழ்ச்சிகளை நடத்தவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.